**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 456** **நாள்: 22.12.2025**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், வடபெரும்பாக்கத்தில் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உயர்மட்ட மேம்பாலத்தினை இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மணலி மற்றும் மாதவரம் மண்டலம், வார்டு-17 மற்றும் 23ல் புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கத்தில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்ட நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதிகளில் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உயர்மட்ட மேம்பாலத்தினை இன்று (22.12.2025) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி மற்றும் மாதவரம் மண்டலம், வார்டு-17 மற்றும் 23ல் புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே உள்ள தரைப்பாலம் மூலமாக வாகனப் போக்குவரத்திற்கு பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர். மழைக்காலங்களில் அதிகளவு நீர் கால்வாயில் செல்வதால் தரைப்பாலம் நீரில் மூழ்கி, வாகனப் போக்குவரத்து தடைபடுவதுடன் பொதுமக்களும் கால்வாயை கடந்து செல்ல மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இப்பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் வடபெரும்பாக்கத்தில் புழல் உபரி கால்வாயின் குறுக்கே சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதிகளின் கீழ் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக பாலம் கட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாலமானது 190 மீ. நீளமும் 7.5 மீ. அகலத்துடன் இரண்டு வாகனங்கள் பாலத்தை கடந்து செல்லும் வகையில் நல்ல உறுதித்தன்மையுடன் அறிவியல் முறைப்படி புதிதாக உயர்மட்ட பாலம் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் சிரமத்தினை போக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் மூலமாக மணலி மற்றும் மாதவரம் பகுதியில் வசிக்கும் சுமார் 1 இலட்சம் மக்கள் மிகவும் பயனடைவர்.

முன்னதாக, மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள், மணலி மண்டலம், வார்டு-17க்குட்பட்ட செட்டிமேடு கிராமத்தில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த மையமானது 3582 சதுர அடி பரப்பளவில் 20 எண்ணிக்கையிலான நாய்கள் பட்டிகள் (Kennels) கொண்ட அறை, தயாரிப்பு அறை, அறுவை சிகிச்சை அரங்கம், ஆய்வகம், சமையலறை, பொருள்கள் இருப்பு அறை, காவலாளி அறை உள்ளிட்ட 26 அறைகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் மணலி மண்டலம், வார்டு-20க்குட்பட்ட மணலி ஏரியில் அம்ருத் மற்றும் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, மாதவரம் மண்டலம், வார்டு-27க்குட்பட்ட மாதவரம் ஏரியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.11.78 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் மாதவரம் ஏரியில் பொதுமக்கள் பொழுதுபோக்கிற்காக படகு சவாரி மேற்கொள்வது தொடர்பாக படகு சவாரி செய்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மணலி மண்டலம், வார்டு-16க்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) நிதியில் ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கு மரக்கன்றினை நட்டார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.சுதர்சனம் (மாதவரம்), திரு.கே.பி.சங்கர் (திருவொற்றியூர்), மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.கௌரவ் குமார், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.ஏ.வி.ஆறுமுகம், திரு.எஸ்.நந்தகோபால், மாமன்ற உறுப்பினர்கள் திரு.ஆ.ராஜேந்திரன், திரு.அ.சந்திரன், திரு.ர.ஜெய்சங்கர், திரு.ப.ராஜன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**மணலி ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகள்**

இந்த மணலி ஏரியானது, 29 ஏக்கர் பரப்பளவில் (1,17,160 சதுர மீட்டர்) 1.20 மீ. ஆழத்துடன் 4 இலட்சம் கனஅடி நீர்த்தேக்கம் உடையதாக இருந்தது. இதில் தற்போது 4மீ. ஆழத்துடன் 12 இலட்சம் கன அடி நீர்த்தேக்கம் உடையதாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஏரியில் ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், கரைகளைப் பலப்படுத்துதல், அணைப் பகுதியில் சரளை கற்களைப் பதித்தல், சுற்றுச்சுவர் அமைத்தல், ஏரியில் மழைநீர் சேர்வதற்கும், உபரிநீர் வெளியேறுவதற்குமான கட்டமைப்புகள் உள்ளிட்ட புனரமைப்புப் பணிகளும், சிறுவர் விளையாட்டுப் பகுதி, பூங்கா, அமர்வதற்கு இருக்கை வசதிகள், வாகன நிறுத்துமிடம், நடைபாதை, கைப்பிடிகள், மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, பாதுகாவலர் அறை, சிற்றுண்டி உணவகம் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மணலி ஏரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புப் பணிகளின் காரணமாக தற்போது பெய்த மழையினால் இந்த ஏரியில் நீர் நிரம்பி ரம்மியமாக காட்சியளிக்கிறது. இதனால் அருகிலுள்ள பகுதிகளில் மழைநீர் பாதிப்பு குறைந்து நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

**மாதவரம் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகள்**

பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலம், வார்டு-27க்குட்பட்ட மாதவரம் ஏரியானது 66.11 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இந்த ஏரியில் 5 மழைநீர் வடிகால்வாய்கள் இணைக்கப்பட்டுள்ளது. இக்கால்வாய்கள் மூலமாகவும் மழைக்காலங்களில் பொழியும் மழையின் மூலமாகவும் பெருமளவில் நீர் சேகரிக்கப்படுகிறது. அவ்வாறாக, இப்பகுதி மக்களுக்கு மிகவும் பயன் தரக்கூடிய இந்த மாதவரம் ஏரியினை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக ரூ.11.78 கோடி மதிப்பீட்டில் ஆழப்படுத்துதல், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மாதவரம் ஏரியினைப் பொதுமக்கள் பார்த்து ரசிப்பதற்கும், நடைப்பயிற்சி மேற்கொள்ளுவதற்கு புதிய நடைபாதையும், சுற்றுசூழல் பேணிக்காப்பதற்கு ஏரிக்கரை ஓரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டும், எரிக்கரையில் உள்ள மண்கள் கரையாமல் இருப்பதற்கு அறிவியல் முறைப்படி கட்டமைப்புகளும் அமைக்கப்பட்டுள்ளது.

மாதவரம் ஏரியினை சுற்றுலா தளமாக மாற்றி பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு சுற்றுலா கழகம் மூலமாக ஏரியில் படகு சவாரி அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கடப்பாக்கம் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகள்**

மணலி மண்டலம், வார்டு-16க்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) நிதியில் ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குளம் 134.89 ஏக்கர் பரப்பளவில் 13.4 சதுர கிலோ மீட்டர் நீர்ப்பிடிப்பு பகுதியுடன் 4 முதல் 8 மீ. ஆழத்துடன் 1.2 மில்லியன் கனமீட்டர் நீர் கொள்ளளவு திறனுடன் இருந்தது. தற்போது இது 1.9 மில்லியன் கனமீட்டர் நீர் கொள்ளளவு திறனுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தில் ஆகாயத்தாமரை அகற்றுதல், 7.2 இலட்சம் கனமீட்டர் பரப்பளவில் வண்டல் மண் அகற்றி தூர்வாருதல், 3,450 மீட்டர் நீளத்திற்கு கரைகள் அமைத்து பலப்படுத்துதல், நீர் உள்ளே வரும் கால்வாய்கள், வெளியேறும் மதகுகள் மற்றும் உபரிவடிகால்களைப் புதுப்பித்தல், 5 ஏக்கர் பரப்பளவில் பறவை தீவு மற்றும் பல்லுயிர் வாழ்விடங்களை உருவாக்குதல். வண்டல் மண்ணைக் குறைப்பதற்கும் நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கும் நுழைவாயிலில் ஆழமற்ற குளம் உருவாக்குதல், பசுமைத் தோட்டங்களுடன் கூடிய பகுதிகள், பசுமைப் பரப்பளவை அதிகரிக்கும் வகையில் தாவரங்கள் நடுதல், நடைபாதை, இருக்கைகள் மற்றும் குழந்தைகள் விளையாடும் பகுதி, பட்டாம்பூச்சி மற்றும் தட்டாம்பூச்சி பன்முகத்தன்மைக்கு பிரத்யேக இடம் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த திட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.